தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சித்திரை 8, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு 2021

1990 ஏப்ரல் 21, சனிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முன்னவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'' சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை. ''

பல தொழில்கள் செய்து சுற்றிச் சுழன்றாலும் உலகம் ஏர்த்தொழிலின் பின்னால்தான் நிற்கின்றது. அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே, அதாவது வேளாண்மையே சிறந்ததாகும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சோவியத் யூனியன் ஆர்மேனியா பகுதியில் நில நடுக்கத்தால் பாதிப்புக்குள்ளான மக்களுக்குத் தமிழகம் சார்பாக செய்யப்பட்ட உதவிகள்.

* *2569* திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சோவியத் யூனியன் ஆர்மேனியா பகுதியில் நில நடுக்கத்தால் பாதிப்புக்குள்ளான மக்களுக்குத் தமிழகம் சார்பாக செய்யப்பட்ட உதவிகளின் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

சோவியத் யூனியனில் ஆர்மேனியா நகரத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக *14—12—1988* நாளிட்ட பொதுத்துறை அரசாணை எண் *2160*ல் (G. O. Ms. No. 2160, Public Department, dated 14th December 1988) மேதகு ஆளுநர் அவர்கள் தலைமையிலான

குழு ஒன்று அமைக்கப்பட்டது. அதன் பிறகு 3–1–1989 நாளிட்ட நிதித்துறையின் அரசாணை எண் 10ல் [G.O. Ms. No. 10, Finance (CMPRF) Department, dated 3rd January 1989.] ஆர்மேனிய நில நடுக்க நிவாரண நிதி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. இந் நில நடுக்க நிவாரண நிதிக்கு நன்கொடையாகப் பெறப்பட்ட ரூ. 20,87,008.36-ம் கேட்பு வரைவோலை மூலம் இந்தியப் பிரதமர் ஆர்மேனிய நிவாரண நிதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோவியத் யூனியனில் ஆர்மேனிய நகரத்தில் ஏற்பட்ட அந்த நிலநடுக்கத்தின்போது, இந்தியாவில் இருந்து கல்வி கற்கச் சென்றவர்கள் யாரேனும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்களா? அப்படி ஆகியிருந்தால் அவர்களுக்கு நம்முடைய அரசு சார்பில் ஏதேனும் உதவிகள் செய்யப்பட்டனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி நிதி திரட்டியது, நிதி அனுப்பப்பட்டது தொடர்புடையதாகும். உறுப்பினர் கேட்பதற்கு விவரங்கள் என்னிடத்திலே இல்லை.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ரூ. 20,87,000 நம்முடைய தமிழகத்தின் சார்பிலே சோவியத் யூனியனுக்கு இந்தியப் பிரதமர் மூலமாக அனுப்பியதாக நம்முடைய முதல்வர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அந்தப் பணம் எந்த முறையிலே வசூல் செய்யப்பட்டது? வசூல் செய்த தொகை முழுவதும் கொடுக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஒரு குழு அமைக்கப்பட்டது. 1988இல் அமைக்கப்பட்ட அந்தக் குழுவிற்கு மேதகு ஆளுநர் தலைவராக இருந்தார். அந்தக் குழுவில் ஆளுநருடைய அப்போதைய இரு ஆலோசகர்கள், தலைமைச் செயலர், நிதிச் செயலர், பொதுத் துறைச் செயலர் ஆகிய 5 பேர் அலுவல்முறை உறுப்பினர்களாகவும், சென்னை ஷெரீப் மற்றும் திருமதி சரோஜினி வரதப்பன், திருமதி ஆண்டாள் தாமோதரன், திருமதி இந்திரா கோத்தாரி, திரு. ஜி. வெங்கடேஸ்வரன், திரு. எஸ். லக்ஷ்மணன், திரு. அரி ஈஸ்வரன், திரு. அசோக் கும்பத், திரு. ஆர். காந்தி மற்றும் திரு. வி. சி. குழந்தைசாமி ஆகிய 10 பேர் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாகவும் இருந்து அதை வசூலித்தார்கள். அந்தத் தொகை இரண்டு தடவையாக இந்தியப் பிரதமருடைய நிதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. 26–7–1989இல் 20,73,232 ரூபாயும், 8–11–1989இல் 13,775 ரூபாயும் அனுப்பி வைக்கப்பட்டது. இங்கே

1990 ஏப்ரல் 21]

தனிப்பட்டவர்கள், சில மக்கள் நல ஸ்தாபனங்கள், அரசியல் கட்சிகள், இவைகளெல்லாம்கூட, இந்த நிதிக்குப் பணம் தந்து இருக்கிறார்கள்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்மேனியா பகுதியில் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தமிழகத்திலே உள்ள அரசியல் கட்சிகள் சார்பில் நிதி அனுப்பியது குறித்த விவரம் ஏதேனும் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

9-05 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னேன், அரசியல் கட்சிகளிடம் நிதி திரட்டப்பட்டது என்று, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திருமதி ஜானகி அணியின் சார்பாக அப்போது 50 ஆயிரம் ரூபாய் இந்த நிதிக்கு நன்கொடை வழங்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, பிரதமர் தேசிய நிவாரண நிதி என்ற பெயரில் 50 ஆயிரம் ரூபாய்க்கு ‘டிமாண்ட் டிராப்ட்’ எடுக்கப்பட்டு, 14-12-1988-ல் அனுப்பப்பட்டது. காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும், நேரடியாக மத்திய அரசுக்கு ஒரு லட்சம் ரூபாய் அனுப்பப்பட்டதாகத் தகவல் இருக்கிறது.

ஓய்வுபெறும் நாளில் தற்காலிக பணிநீக்கம்,

***2680 திரு. எஸ். டி. உகம்சந்த் :**

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசுத்துறை மற்றும் அரசு நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் ஓய்வுபெறும் நாளில் அவர்கள் மீது உள்ள குற்றச்சாட்டுகளுக்கு முன்னறிவிப்பு ஏதுமில்லாமல் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்படும் முறையை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர். மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட வேண்டிய நிகழ்வுகளில் அவர்கள் பணியிலிருந்து ஓய்வுபெறும் நாளுக்கு குறைந்தபட்சம் பதினைந்து நாட்களுக்கு முன்பாகவே தேவைப்படின் தற்காலிக